## சிறப்புக் குறிப்பு 14
## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்[1]

### நாணயக் கொள்கை

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 22 | - | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2019 மாச்சு 01இல் ஆரம்பிக்கப்படுகின்ற ஒதுக்கு பராமரிப்பு காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 6.00 சதவீதத்திலிருந்து 5.00 சதவீதத்திற்கு 1.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளது. |
| 2019 மே 31 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப்புள்ளிகளினால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2019 ஓகத்து 23 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.00 சதவீதத்திற்கும் 8.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 சனவரி 30 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கம் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2020 மாச்சு 17 | - | துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| | - | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீத பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2020 மாச்சு 16இல் ஆரம்பிக்கப்படுகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 5.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதத்திற்கு 1.00 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது |
| 2020 ஏப்பிறல் 03 | - | 2020 ஏப்பிறல் 03 அன்று வியாபாரம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |

### நிதியியல் துறை

#### உரிமம்பெற்ற வங்கிகள்

| | | |
|---|---|---|
| 2019 சனவரி 04 | - | இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளில் வெளிநாட்டினரை பணிக்கமர்த்துவது குறித்த வழிகாட்டல்களை தெரிவிக்கும் சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டதுடன், இது தொடர்பாக வழங்கப்பட்ட முந்தைய சுற்றறிக்கை இரத்துச்செய்யப்பட்டது. |
| 2019 சனவரி 18 | - | புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தற்போதுள்ள அறிக்கையிடல் வடிவங்களை மாற்றி புதிய நிதி அறிக்கைகளின் வடிவங்களைக் குறிப்பிட்டு, வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய வெளிப்படுத்துகையை வெளியிடுவது குறித்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2019 மாச்சு 07 | - | உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவுத் தேவைப்பாடுகளை மீளப்பெறுவதற்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 மாச்சு 13 | - | ஏற்பு ஆவண நியதிகளின் கீழ் இறக்குமதிக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மீளப்பெறப்பட்டது. |
| | - | நிதியியல் சாதனங்கள்/ சேவைகளின் பண்புகளை பாதிக்கும் வகையில் அதிஷ்டலாபத் திட்டங்கள்/ குலுக்கல் ரீதியான திட்டங்கள் மற்றும் பரிசுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலிருந்து உரிமம்பெற்ற வங்கிகளை தடுப்பது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. மேலும், பருவகால/ ஊக்குவிப்பு ரீதியான பரிசுத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டன. |

1 இது 2019 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டதும் 2020 ஏப்பிறல் 03 அன்று முடிவடைந்த வாரம் வரையிலும் அதேபோன்று அண்மைய எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் உள்ளடக்குகிறது. அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 2019 திசெம்பர் 1 மற்றும் 2020 ஏப்பிறல் 1 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கொள்கை வழிமுறைகளும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தால் பொதுமக்களுக்கான அறிவித்தல்களாக வெப்தளத்தில் பிரசுரிக்கப்பட்டவையும் பாராளுமன்றத்தின் அனுமதிக்குட்பட்டவை.

| | | |
|---|---|---|
| 2019 ஏப்பிறல் 18 | - | சலுகை நிபந்தனை அனுமதியின் கீழ் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களை திறப்பதற்கான கட்டுப்பாடுகளின் நீக்கத்தை அறிவிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 26 | - | சேமிப்பு மற்றும் மூன்று மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்குரிய அல்லது முதிர்ச்சிக்காலம் குறிப்பிடப்படாத வைப்புக்களுக்கான வட்டி வீதம் துணைநில் வைப்பு வசதி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கு அதிகமான காலப்பகுதிக்குரிய தவணை வைப்புக்களின் வட்டி வீதங்கள் 364 நாட்களுக்குரிய திறைசேரி உண்டியல் வீதத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும் இலங்கை ரூபா வைப்புக்களுக்கான உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் அல்லது செலுத்தப்படக்கூடிய அதிகபட்ச வட்டி வீதங்களை விதிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நாணய விதிச் சட்டக் கட்டளையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான கொடுகடனை அதிகரிக்கும் நோக்கில் 2019 சனவரி 01 முதல் 2020 யூன் 30 வரையிலான இடைக்காலப் பகுதியில் குறிப்பிட்ட வழிமுறைகளை (இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 இனைப் பின்பற்றுவது தொடர்பாக) உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | பாசல் III கட்டமைப்பின் கீழ் மூலதன மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் நோக்கத்திற்காக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அடையாளம் காணப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2019 மே 08 | - | 2019 ஏப்பிறல் 18இல் உள்ளவாறான வெளிநின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பாக 2020 மாச்சு 31 வரை தொழிற்படு கடன்களுக்களுக்கான விடயங்கள் அடிப்படையில் (கடன் மற்றும் வட்டி) இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அல்லது சுற்றுலா துறையுடன் தொடர்புபட்ட சேவைகளை வழங்கும் ஏனைய சபை/ நிறுவனத்துடன் பதிவுசெய்த தனிநபர்கள் மற்றும நிறுவனங்களுக்கு சட்ட இசைவுத்தாமதத்தினை வழங்குவதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 மே 31 | - | இலகுபார ஊர்திகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதத்தை 70 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு அதிகரிப்பதன் மூலம் உந்து ஊர்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன்விகிதம் மீதான 2018இன் வங்கித்தொழில் சட்டம் பணிப்புரை இல.01 இனை திருத்தும் வகையில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகள் வழங்கப்பட்டது. |
| 2019 யூன் 28 | - | “இலங்கை தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின்” சிறிய வாடகைக் கார் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் பதிவு செய்யப்படாத இலத்திரனியலற்ற மோட்டார் கார்களுக்கு 80 சதவீத பெறுமதிக்கான கடன் விகிதம் பிரயோகிக்கப்படுமென அறிவிக்குமுகமாக வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை வெளியிப்பட்டது. |
| 2019 யூலை 18 | - | பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் மீதான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளில், மூலதனம் மற்றும் இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சொத்துக்களின் கணிப்புடன் இசைந்து செல்வதனை உறுதிப்படுத்துவதற்காக பாசல் III இன் கீழான மூலதனப் போதுமை விதத்தினை இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 உடன் இணைக்கும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விளக்கக் குறிப்பொன்று விடுக்கப்பட்டது. |
| | - | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்காக பாசல் III இன் கீழ், முடுக்கி விகிதம் தொடர்பான 2018ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளுக்கான விளக்கங்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விளக்கக் குறிப்பொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 ஓகத்து 29 | - | இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தை நடத்தை மற்றும் திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பில் சந்தை நடத்தை மற்றும் ஒழுக்கவியல் நடவடிக்கைகள், இரகசியத்தன்மைத் தேவைப்பாடுகள், வணிகம் தொடர்பான உரையாடல்களைப் பதிவுசெய்வதற்கான நடைமுறைகள், |

| | | |
|---|---|---|
| | | இடர்நேர்வு முகாமைத்துவத் தத்துவங்கள், தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அறிவுமட்டம் மற்றும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமைக்கான தடைகள் என்பனவற்றை உள்ளடக்கிய வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்டன. |
| 2019 செத்தெம்பர் 05 | - | தனியான முதனிலை வணிகர்களுக்காக நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகள் மூலமான திரவத்தன்மை துணை வசதியொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் மத்திய வங்கியால் நடத்தப்படுகின்ற உடனடி ஏலங்களில் (விற்பனை/ கொள்வனவு) திறைசேரி முறிகளை ஏற்றுக்கொள்வதை அறிவிக்குமுகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| | - | திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகின்ற திறைசேரி உண்டியல்∴ முறிகளின் உடனடி விற்பனை/ கொள்வனவு ஏலங்களில் தனியான முதனிலை வணிகர்கள் பங்குபற்றுவதை அனுமதிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 24 | - | உரிமம்பெற்ற வங்கிகளின் இலங்கை ரூபா வைப்புக்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி தொடர்பான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணய விதிச் சட்டக்கட்டளை இரத்துச் செய்யப்பட்டது. |
| | - | அண்மைய கொள்கைத் தீர்மானங்களை ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்கு ஊடுகடத்தும் வினைத்திறனை உயர்த்துவது தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நாணய விதிச் சட்ட கட்டளையொன்று விடுக்கப்பட்டது. இதன்படி, அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்களை இலக்கிடப்பட்ட திகதிகளுக்குள் குறைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், கொடுகடன் அட்டை முற்பணங்கள், முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் மற்றும் செலுத்தவேண்டிய காலப்பகுதியின் அனுமதிக்கபட்ட எல்லையின் மிகைத் தொகைக்கு அல்லது நிலுவைகளுக்கான தண்டவட்டிவீதங்கள் என்பனவற்றின் மீது உச்சபட்ச வட்டிவீதம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2019 நவெம்பர் 18 | - | 2021 சனவரி 1 இலிருந்து தொடங்குகின்ற நிதியியல் ஆண்டிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு தகைமை வாய்ந்த கணக்காய்வாளர்களின் புதிய பட்டியலை அறிவித்துச் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. |
| 2019 திசெம்பர் 19 | - | பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை மேற்கொள்கின்ற அதிகாரிகளின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான தற்போதைய ஒழுங்குமுறைகளானது, மேலும் விரிவான தகவல்களை உள்ளடக்கிய சத்தியப்பிரமாண மூலவடிவத்தை அறிமுகப்படுத்தவும் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகளாக நிர்ணயிக்கப்படக்கூடிய பதவிகளின் உள்ளடக்கத்தை அதிகரிக்கவும் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் திருத்தியமைக்கப்பட்டது. |
| | - | இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளரொருவர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரொருவர், இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கியொன்றில் அவரின்/ அவளின் பதவிக்காலம் முடிவடைந்த திகதியிலிருந்து 6 மாத காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னதாக இலங்கையில் தொழிற்படுகின்ற மற்றொரு உரிமம் பெற்ற வங்கியில் பணிப்பாளராகவோ அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ நியமிக்கப்படுவதைத் தவிர்க்கக் கோரி கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை திருத்தியமைக்கப்பட்டது. |
| | - | மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள், மதிப்பீடுகளின் கால இடைவெளி மற்றும் உள்ளக மதிப்பீடுகளுக்கான அடிப்படை போன்ற பகுதிகளை உள்ளடக்கி அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான தற்போதைய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு திருத்தப்பட்டது. |
| 2019 திசெம்பர் 20 | - | பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கிணைவாக உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் கையாள்வதற்கான புதிய கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் புதிய கட்டமைப்பின்படி நான்கு உரிமம்பெற்ற வங்கிகளை உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் |

| | | |
|---|---|---|
| | | வாய்ந்த வங்கிகளாக நிர்ணயித்து, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை வெளியிடப்பட்டது. அதன்படி, உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக நிர்ணயிக்கப்பட்ட வங்கிகள் பொதுவான பங்குரிமை மூலதன அடுக்கு 1 இலிருந்து பூர்த்திசெய்யக்கூடிய வகையில் 1-2 சதவீத இடைவெளியில் மாறிடும் வகையில் உயர் இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்கான தேவைப்பாடுகளின் அடிப்படையில் 3 வகைக்குள் உள்ளடக்கப்படும். |
| 2020 சனவரி 30 | - | தகுதியான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்பெறுநர்களுக்கு கொடுகடன் உதவியை வழங்குவதற்கு ஒரு சிறப்புக் கொடுகடன் உதவித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்குச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 01 | - | ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள் வரை ஏற்றுமதி கொடுகடன் வசதியினைத் தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட அதியுச்ச கால நீடிப்பினை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 19 | - | ஏற்றுக்கொள்ளல் மற்றும் முற்கொடுப்பனவு ஆவணங்களுக்கெதிராக நாணயக் கடிதங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி வசதிகளை நிறுத்துவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவும் நிறுத்தப்பட்டது. |
| 2020 மாச்சு 24 | - | கொவிட்-19 இனால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்குச் சலுகை நடவடிக்கைகள் வழங்குவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | 2020 மாச்சு 25 இலிருந்து சுயதொழில் செய்யும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலாக கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மீள்நிதியிடல் வசதியில் பங்கேற்கும் தகுதியை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிககளுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்குப் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டதுடன் மீள்நிதியிடல் வசதியினை அமுல்படுத்துவதற்கான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை குறித்து நிற்கின்றது. |
| | - | வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையைப் பாதிக்கும் மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள் மற்றும் பிற காரணிகளைக் கருத்தில் கொண்டு கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களை ஆதரிக்கும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கி அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானித்தது. இந்த அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முக்கியமாக உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள், உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவமல்லாத வங்கிகள் ஆகியவற்றின் மூலதன தாங்கிருப்புப் பேணுகையைக் குறைப்பதற்கு அனுமதித்தல், செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் மீதான குறிப்பிட்ட தேவைப்பாடுகளைத் தளர்த்துதல், வங்கிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளை உறுதிசெய்யும் வகையில் ரூபாயில் வெளிநாட்டு நாணயக் கடன்களை மாற்றுவதற்கும் மீட்பதற்கும் அனுமதித்தல் மற்றும் 2020 இறுதியில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை இதுவரை நிறைவு செய்யாத உரிமம்பெற்ற வங்கிகளின் மூலதனத்தை மேம்படுத்துவதை 2022 இறுதிக்கு ஒத்திவைத்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. |
| இனிவர இருப்பவை | - | புதிய வங்கித்தொழில் சட்டத்தின் வரைவு |
| | - | உரிமம்பெற்ற வங்கிகளின் மீட்சித் திட்டங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை செயற்படுத்தல் |
| | - | உரிமம்பெற்ற வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வுத் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கான ஒரு கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குதல் |

| | | |
|---|---|---|
| | - | முன்மதியுடைய தேவைப்பாடுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மாற்றங்களுக்கு ஒத்திசைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல்களை மீளாய்வு செய்தல் மற்றும் திருத்தங்களை அறிமுகப்படுத்தல் |
| | - | நீடித்துநிலைத்திருக்கும் நிதியை நோக்கிய வங்கித்தொழில் துறையின் முன்னெடுப்புக்களுக்கு வசதியளித்தல் |

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்**

| | | |
|---|---|---|
| 2019 மாச்சு 01 | - | 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் நியூவெஸ்ட் கப்பிட்டல் லிமிடெட்டிற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்பட்டதுடன் இக்கம்பனி மற்றொரு உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் கையேற்கப்பட்டது. |
| 2019 மாச்சு 06 | - | உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் பிணையுறுதிக்கான வைப்புக்கள் தவிர வைப்புக்களை ஏற்றுக்கொள்வதைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் “வைப்புக்கள்” மீதான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 26 | - | அளவுக்கதிகமான வட்டி வீதங்களிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட நுண்பாக நிதிக் கடன்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதத்தினை அறிமுகப்படுத்துவதற்கான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 29 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்களை அறிமுகப்படுத்துவதற்கான பணிப்புரையொன்று விடுவிக்கப்பட்டது. |
| 2019 மே 15 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலுள்ள பங்குகளின் சொத்துரிமையினைப் பன்முகப்படுத்தும் குறிக்கோளுடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு சொத்துடமை வரையறைகளை அறிமுகப்படுத்தல் மீது ஆலோசனைப் பத்திரமொன்று வழங்கப்பட்டது. |
| 2019 மே 21 | - | சுற்றுலாத் துறையுடன் தொடர்பான பணிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை/ முகவர்களுடன் பதிவுசெய்து கொண்டுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சட்ட இசைவுத் தாமதத்தினை வழங்குவதற்கு அவர்களை இயலுமைப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 மே 31 | - | முதனிலை வணிகர் கம்பனியொன்றான நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் வியாபாரத் தொழிற்பாடுகளும் நடவடிக்கைகளும் 2019 மே 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டன. |
| | - | இல.2125/58 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கீழ், முடிவுறுத்தப்படுகின்ற உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் கோரல்களின் முன்னுரிமை மீது ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. |
| 2019 யூன் 04 | - | இலகுபார ஊர்திகளுக்கு, உயர்ந்த பெறுமதிக்கான கடன் விகிதத்தினை அனுமதிப்பதன் மூலமாக 2019 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்காக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஏற்கனவே விடுக்கப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பான பணிப்புரை திருத்தப்பட்டது. |
| 2019 யூலை 10 | - | ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்டிற்கும் சிங்கபுத்திரா பினான்ஸ் லிமிடெட்டிற்கும் உரிமத்தினை இரத்துச்செய்யும் அறிவித்தல் விடுக்கப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 19 | - | சிங்கபுத்திரா பினான்ஸ் பிஎல்சியினால் முன்மொழியப்பட்ட மூலதன அதிகரிப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றினை அக்கம்பனிக்கு வழங்க நாணயச் சபை தீர்மானித்தது. |
| | - | ரிகேஎஸ் பினான்ஸிசிற்கு வழங்கப்பட்ட உரிமம் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்டது.. |

| | | |
|---|---|---|
| 2019 செத்தெம்பர் 26 | - | பணம் கடன்வழங்கலையும் நுண்பாக நிதி வியாபாரத்தினையும் மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உத்தேச நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டம் நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 16 | - | கைத்தொழிலின் ஆர்வலர்களின் அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு சொத்துடமை வரையறைகளை அறிமுகப்படுத்தல் மீதான இரண்டாவது ஆலோசனைப் பத்திரம் வெளியிடப்பட்டது. |
| | - | கைத்தொழிலில் பன்னாட்டு மற்றும் உள்ளூர் அபிவிருத்திகள், வளர்ந்துவரும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகள், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய நியமங்களைத் தீர்மானிக்கும் அமைப்புக்களின் வேகத்துடன் நகரும் நோக்கத்துடன் உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகளுக்கான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான ஆலோசனைப் பத்திரமொன்று வெளியிடப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 18 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் தொடர்பான பணிப்புரை சிறிதளவு அதிகரித்த வீதங்களுடன் திருத்தப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 23 | - | த பினான்ஸ் கம்பனிக்கு உரிமத்தினை இரத்துச்செய்யும் அறிவித்தல் விடுக்கப்பட்டது. |
| 2019 நவெம்பர் 30 | - | முதனிலை வணிகர் என்ற ரீதியில் வியாபாரங்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்தும் நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் இடைநிறுத்தப்பட்டமை இரத்துச் செய்யப்பட்டது. |
| 2019 திசெம்பர் 19 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட அசையாச் சொத்துக்களை மதிப்பீடு செய்வது மீதான ஏற்கனவேயிருந்த பணிப்புரையானது மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணம் மற்றும் மதிப்பீட்டுக் கால இடைவெளி என்பனவற்றில் மாற்றங்களைச் செய்ததன் மூலம் திருத்தப்பட்டது. |
| 2019 திசெம்பர் 20 | - | பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களிலுள்ள வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 14 | - | இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் கருவிகள் மற்றும் மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதுடனான உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகளுக்கு குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல், கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீது பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 17 | - | இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் கருவிகள் மற்றும் மத்திய வங்கியில் முன்மதியுடைய தேவைப்பாடுகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதுடன் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிர்ணயித்தல், கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் மீது பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 10 | - | தகுதியான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்பெறுநர்களுக்கு கொடுகடன் உதவியை வழங்குவதற்கு சிறப்பு கொடுகடன் உதவித்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டல்களை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வழங்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 24 | - | கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்குச் சலுகை நடவடிக்கைகளை வழங்குவதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பினிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | 2020 மாச்சு 24 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு பிற்சேக்கையாகவும் கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட சுயதொழில் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலான வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ரூ.50 மில்லியன் ஆறு மாத மீள்நிதியிடல் வசதியினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழிற்பாட்டு வழிகாட்டுதல்களை குறித்துக்காட்டி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் |

| | | |
|---|---|---|
| | | சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 31 | - | தற்போதைய சந்தை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இந்தப் பணிப்புரையின் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும் தற்போதைய பணிப்புரையைத் திருத்தி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் பராமரிக்கப்பட வேண்டிய திரவச் சொத்துக்கள் மீது பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தினைத் திருத்துதல். |
| | - | கம்பனி ஆளுகை மீதான பணிப்புரையை திருத்துதல். |
| | - | இ-பணமுறைமை மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் உட்பட பின்டெக் தீர்வுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் பணிப்புரைகளை அறிமுகப்படுத்தல். |
| | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான சொத்துரிமை வரையறைகள் மற்றும் இடர்ப்பாட்டிலுள்ள கம்பனிகளை மீளவமைப்பதற்கு அக்கம்பனிகளில் முதலீடு செய்கின்ற முதலீட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குதல் மீது பணிப்புரைகள் வெளியிடுதல். |
| | - | நிதியியல் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கும் நடுத்தர காலப்பகுதியில் தாக்குப்பிடிக்கக்கூடிய மற்றும் சிறப்பாகச் செயற்படும் இருபத்தைந்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை நிறுவுவதற்கும் ஒரு செயற்றிட்டத்தினை அபிவிருத்தி செய்தல். |
| | - | நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைச் சட்டத்தினை இறுதி செய்தல் மற்றும் சட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்தல். |
| | - | இடர்ப்பாட்டிலுள்ள மற்றும் உயர் இடர்நேர்வுக் கம்பனிகளைக் கையாள்வதற்கு நியமப்படுத்தப்பட்ட தீர்மானத் திட்டம், உரிமங்களை இரத்துச் செய்தல் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை முடிவுறுத்தல் என்பனவற்றை உள்ளடக்கிய கொள்கைக் கட்டமைப்பொன்றை அபிவிருத்தி செய்தல். |
| | - | மற்றைய மேற்பார்வைத் திணைக்களங்களின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் அனைத்து நிறுவனங்களுக்குமான ஒருமுகப்படுத்தப்பட்ட நிதியியல் நுகர்வோர் பாதுகாப்புக் கட்டமைபொன்றினை நிறுவும் விதத்தில் கொள்கைப் பத்திரமொன்றினைச் சமர்ப்பித்தல். |

## காப்புறுதி

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 24 | - | நீண்டகால காப்புறுதி வழங்குனர்களுக்கு கோரப்படாத எவையேனும் நன்மைகளை ஆயுள் நிதியத்தின் இலாபங்களாக கருத்திற்கொள்ளாமல் இருப்பதனைக் கோருகின்ற பணிப்புரையொன்று இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 25 | - | தனியான மருத்துவக் காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்குதல் தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்கு நீண்டகால காப்புறுதி வழங்குநர்களுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 26 | - | ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவர் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் கொள்கையொன்றின் ஒப்பந்த உடமையாளராக இல்லாதவிடத்து சில ஆயுட்காப்புறுதி செய்யப்பட்டவர்களுக்கும்/ நன்மைபெறுநருக்கும் ஒப்பந்த ஆவணத்தின் பிரதியொன்று வழங்கப்படாமையினால் "ஆயுள் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு/ நன்மைபெறுநருக்கு ஒப்பந்த ஆவணங்களை வழங்குதல்" மீதான பணிப்புரையினை இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு திருத்தம் செய்தது. |
| 2019 யூலை 24 | - | காப்புறுதி தரகர்களுக்கு குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குவித்தல் மீதான பணிப்புரையொன்று இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு திருத்தங்களை முன்மொழிதல். |

## மூலதனச் சந்தை

2019 சனவரி 01 - பங்குத்தரகுத்தொழில் துறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்காக குறைந்தபட்ச தகைமை மட்டத்தினை உறுதிசெய்வதற்கு திருத்தப்பட்ட தகைமை கட்டமைப்பொன்று பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

2019 சனவரி - வழங்கல் எதிர் கொடுப்பனவின் வியாபார மற்றும் தொழிற்பாட்டு விபரக்குறிப்புகள் இறுதிப்படுத்தப்பட்டு இலாப மாதிரி மேம்படுத்தப்பட்டதுடன், நடைமுறைப்படுத்தல் செயன்முறையினைத் தொடங்குவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு அறிவுறுத்தப்பட்டது.

2019 சனவரி 25 - பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் தலைவரினதும் இரட்டை இயல்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நிறுவன ஆளுகைக்கட்டமைப்பு திருத்தம் செய்யப்பட்டது.

2019 யூன் 21 - அரசுக்கு சொந்தமான வங்கிகளின் நிகழத்தக்க மாற்று உரிமைகளின் பட்டியலிடலுக்கான பாசல் ஐஐஐ அனுமதியளித்தல் கட்டமைப்பினை வகுத்தல் பூரணப்படுத்தப்பட்டது.

இனிவரவிருப்பவை - கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிறுவனங்களின் ஆரம்ப பட்டியலிடலை ஆளுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் கொள்கையொன்றினை வகுத்தல்

- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பரஸ்பரமற்றமயமாக்கலுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- பிணையங்கள் பரிவர்த்தனை சட்டத்தினை திருத்துதல்.

- சந்தை இடைத்தரகர்களுக்கான மத்திய இணைத்தரப்பு பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கையினை இறுதிப்படுத்தல்.

## சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி

2019 யூலை 01 - இலங்கை தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 'றன் அஸ்வென்ன', 'கொவி நவோத', 'ஜெய இசுற', 'திறிசவிய', 'தொழிற்படு மூலதனம்', மற்றும் 'பசுமைக் கடன்' ஆகிய கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியூடாக அரச உத்தரவாதங்களை வழங்குவதற்காக புதிய கொடுகடன் உத்தரவாதத்திட்டமொன்றினை நடைமுறைக்கிடுவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் நிருவாக உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டது.

2019 யூலை 05 - உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிப்படைந்த சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதத்திற்கு இசைந்து செல்லும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் கடன்பெற்ற நன்மைபெறுநர்களுக்குச் சலுகைகள் வழங்குவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2019 யூலை 30 - சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுகடன் கூறின் மீளமைத்தலை இயலுமைப்படுத்துவதற்காக நிருவாக உடன்படிக்கைக்கான இரண்டாவது அனுபந்தம் இலங்கை அரசாங்கத்துடன் கைச்சாத்திடப்பட்டது.

2019 ஓகத்து 05 - தற்போதுள்ள சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தில் ஏற்கனவேயுள்ள கடன் திட்டங்களுக்கு மீளப்பெயரிடல் மற்றும் பண்புகளைத் திருத்துதல் மூலம் ஐந்து புதிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

2019 நவெம்பர் 13 - தேயிலை மீள்நடுகை மற்றும் இறப்பர் புதுநடுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறுஉடமை வேளாண்மையாளர்களுக்கு ஆதரவளிக்கும் சிறு தேயிலை உடமையாளர்கள் மற்றும் இறப்பர் உயர் வளர்ச்சி உத்வேக வட்டி மானிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பெருந்தோட்டத் தொழில் மற்றும் ஏற்றுமதி வேளாண்மை அமைச்சு மற்றும் சிறு தேயிலை உடமையாளர்கள் மற்றும் இறப்பர் உயர் வளர்ச்சி உத்வேகத் திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2020 சனவரி | - | ஒதுக்கப்பட்ட மொத்த நிதியினை ரூ.390 மில்லியனிலிருந்து ரூ.950 மில்லியனுக்கு அதிகரிப்பதற்காகவும் உயர்ந்தபட்சக் கடன் தொகையினை ரூ.500,000 இருந்து ரூ.1,000,000இற்கு அதிகரிப்பதற்காகவும் சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் கட்டம் ஐஐஇன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |
| | - | பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் கொடுகடன் ஆதரவுத் திட்டத்தின் கீழ் செயற்படாக் கடன் வகையின் கீழ் தற்போதிருக்கும் முன்னைய கடன்களை வைத்திருக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக புதிய கொடுகடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. |

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 26 | - | இலத்திரனியல் கொடுப்பனவுச் சாதனங்கள்.:. பொறிமுறைகளூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கு அதேநேர அறிவித்தல்களை வழங்குவதற்கு நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்துகின்ற விதத்தில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2019 மாச்சு 11 | - | வருமானப் பங்கீட்டினை நெறிப்படுத்தும் பொருட்டு, தேசிய விரைவு பதிலிறுப்புக் குறிபீட்டு நியமமொன்றினை நிறுவுவது தொடர்பில், 2018ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கைக்குப் பதிலாக, 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2019 நவெம்பர் 25 | - | இ-பணக் கணக்குகளின் வாடிக்கையாளருக்கு ஏற்புடைத்தான இ-பணக் கணக்குகளின் குறிப்பிட்ட எண்ணிக்கை, தனிப்பட்ட முறையில் சேமிக்கப்படும் பெறுமதி வரையறை, நாளொன்றிற்கான வரையறை மற்றும் கொடுக்கல்வாங்கல் வரையறைகள் தொடர்பில் 2019ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

| | | |
|---|---|---|
| 2019 மே 13 | - | 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க காப்புறுதியாளர் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனம்) விதிகளாக நீண்ட காலமாக காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களுக்கு "இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறை" ஒன்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான வாடிக்கையாளர் விழிப்புக்கவனத்தை மேற்கொள்வதற்கு விசேட வர்த்தமானி இல. 2123/14 வெளியிடப்பட்டது. |
| 2019 மே 23 | - | 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனம்) விதிகளின் கீழ் அரசசார்பற்ற நிறுவனங்கள், இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் மற்றும் அறக்கொடை நிறுவனங்களுடன் தொடர்புடைய மேம்படுத்திய விழிப்புக்கவனத்தினை நடாத்துவதற்கு 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| | - | 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் ஒழுங்குவிதியின் கீழ், குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கு திருத்தங்களை உட்புகுத்துவதற்காக இல. 2124.:.32 கொண்ட அதிவிசேட வர்த்தமானி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டது. |
| 2019 ஓகத்து 22 | - | குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலுக்கான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 02 | - | குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களுக்கான பயன்பெறு சொத்துடைமையை அடையாளம் கண்டு கொள்வதற்காக 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 09 | - | 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7)ஆம் ஒழுங்குவிதியின் கீழ், குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் பட்டியலுக்கு திருத்தங்களை உட்புகுத்துவதற்காக இல. 2140.:.16 கொண்ட அதிவிசேட வர்த்தமானி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 01 | - | குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்காக அரசியல் ரீதியாக முகம்கொடுக்க வேண்டிய ஆட்களை அடையாளங்காண்பதற்கான 2019ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2019 திசெம்பர் 03 | - | உரிமமளிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான இடைநீக்கம் செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து பிடித்துவைத்தல் வரியினை பற்று வைப்பதற்கு 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 05 | - | உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குதரகர் கம்பனிகளுக்கான சூழ்நிலை அடிப்படையிலான லங்காபின் அறிக்கையிடல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது. |
| 2020 மார்ச்சு | - | எல்லையின் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதியை பிற்போடுகின்ற அதிவிசேட வழிமுறைகள் பற்றி அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 27 | - | 2019இல் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கும் வதிவற்ற முதலீட்டாளர்களுக்கு அத்தகைய வழங்கல் தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை செய்வதற்கும் இலங்கை அரசாங்கத்தினை அனுமதிக்கின்ற விதத்தில் இல.2112/17 கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 பெப்புருவரி 28 | - | தொடர்பான அமைச்சினதும் வேறு ஏதேனும் தொடர்பான அதிகாரசபைகளினதும் ஒப்புலுக்குட்பட்டு, குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலிருந்து கடன்படுவதற்கு இலங்கை அரசாங்கத்தினையும் 50 சதவீதத்திற்கு மேலான மூலதனப் பங்குகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகவுள்ள இலங்கை அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளையும் கடன் வழங்குநரின் உள்முக முதலீட்டு கணக்கினூடாக கடன்பெறுகைகளை அனுப்பாமல், அனுமதிக்கின்ற விதத்தில் இல 2112/25 கொண்ட அரச வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது. |
| 2019 மார்ச்சு 26 | - | முற்பணக் கொடுப்பனவு நியதிகளின் கீழ், இன்றியடையாதனவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்காகச் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்காக, இலங்கை ரூபாவின் மாற்றல்களுடன் தொடர்புபட்ட பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதனைக் கட்டுப்படுத்துவது புறக்கீடு செய்யப்படுவதனை அறிவிக்கின்ற விதத்தில் பணிப்புரைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்டன. |
| 2019 ஒத்தோபர் 17 | - | ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புவதற்காக பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தினை அத்தகைய ஏற்றுமதி இடம்பெற்ற நாளிலிருந்து 120 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு நீடிக்கப்படுவதனை குறித்துரைக்கின்ற 2145/49 கொண்ட வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தல் வெளியிடப்பட்டது. |
| 2020 மார்ச்சு 19 | - | ஓய்வு, வியாபாரம், பயிற்சி, மருத்துவ சிகிச்சைகள் உள்ளிட்ட ஏதேனும் நோக்கத்திற்காக வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் இலங்கையில் வசிக்கும் நபர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை ஐ.அ.டொலர் 5,000 வரை அல்லது பிற வெளிநாட்டுச் நாணயத்திற்குச் சமமானதாக (முன்னர் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய உதவுதொகை ஐ.அ.டொலர் 10,000 இலிருந்து) மட்டுப்படுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்குமுகமாகப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2020 மார்ச்சு 20 | - | கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் கீழ் குறிப்பிட்ட அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிக்கான வெளிநாட்டுச் செலாவணி வெளியிடுவதை உடனடியாக 3 மாத காலத்திற்கு இடைநிறுத்துவதற்கும் குறிப்பிட்ட இறக்குமதிகள் மற்றும் வெளிநாட்டு நாணய முதலீடுகளைக் குறைப்பதன் மீது வெளியிடப்பட்ட வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களைக் கேட்டுக் கொள்கின்ற விதத்தில் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |

## விலைத் திருத்தங்கள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டன:

(ரூ. லீற்றரொன்றுக்கு)

| திகதி | பெற்றோல் | | தன்னியக்க டீசல் | சிறப்பு டீசல் |
|---|---|---|---|---|
| | 92 ஒக்ரேன் | 95 ஒக்ரேன் | | |
| 11.01.2019 | 123 | 147 | 99 | 118 |
| 12.02.2019 | 129 | 152 | 103 | 126 |
| 13.03.2019 | 132 | 159 | 104 | 134 |
| 11.04.2019 | 132 | 159 | 104 | 134 |
| 11.05.2019 | 135 | 164 | 104 | 136 |
| 11.06.2019 | 138 | 164 | 104 | 136 |
| 11.07.2019 | 136 | 159 | 104 | 131 |
| 14.08.2019 | 138 | 163 | 104 | 134 |
| 11.09.2019 | 137 | 161 | 104 | 132 |
| 11.10.2019 | 137 | 161 | 104 | 132 |

பல பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2019.05.31 | வெள்ளை/ சிவப்பு சம்பா (வேக வைக்கப்பட்ட/ அவிக்கப்பட்ட) (கீரி சம்பா மற்றும் சுதுறு சம்பா நீங்கலாக) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 இற்கு விதிக்கப்பட்டது |
| | வெள்ளை நாட்டரிசி (வேக வைக்கப்பட்ட/ அவிக்கப்பட்ட) (மொட்டைக் கருப்பன் மற்றும் ஆட்டக்காறி நீங்கலாக) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.74 இலிருந்து ரூ.80 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| 2019.10.23 | தேங்காய் | தேங்காய் ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.75 இற்கு நீக்கப்பட்டது |
| 2019.12.19 | வெள்ளை/ சிவப்பு சம்பா (வேகவைக்கப்பட்ட/ அவிக்கப்பட்ட) (கீரி சம்பா மற்றும் சுதுறு சம்பா நீங்கலாக) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 இலிருந்து ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| | வெள்ளை நாட்டரிசி (வேகவைக்கப்பட்ட/ அவிக்கப்பட்ட) (மொட்டைக் கருப்பன் மற்றும் ஆட்டக்காறி நீங்கலாக) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.80 இலிருந்து ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| | சிவப்பு நாட்டரிசி (வேகவைக்கப்பட்ட/ அவிக்கப்பட்ட) (மொட்டைக் கருப்பன் மற்றும் ஆட்டக்காறி நீங்கலாக) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.74 இலிருந்து ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது |
| 2019.12.27 | இலங்கையில் தயாரிக்கப்படும் சிமெந்து | கிலோ ரூ.50 இற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.1,005 விதிக்கப்பட்டது |
| | தொகைவடிவத்தில் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கையில் பக்கற் செய்யப்பட்ட சிமெந்து | கிலோ ரூ.50 இற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.950 விதிக்கப்பட்டது |
| | பக்கற் வடிவத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சிமெந்து | கிலோ ரூ.50 இற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.930 விதிக்கப்பட்டது |
| 2020.01.29 | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய முகமூடி - நெய்யாத (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகமூடி - நெய்யாத (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது |
| | முகமூடி (N95 வகை - துகள் சுவாசக் கருவி) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.150 விதிக்கப்பட்டது |
| 2020.02.23 | பெரிய வெங்காயம் | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.78 இலிருந்து ரூ.190 இற்கு அதிகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 2020.03.12 | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோலுடன் | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.430 இற்கு விதிக்கப்பட்டது |
| | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோல் நீக்கிய | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.500 இற்கு விதிக்கப்பட்டது |
| | சோளம் (எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது) | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.55 இற்கு விதிக்கப்பட்டது |
| 2020.03.16 | 2020.01.29 அன்று பின்வரும் மருத்துவச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன; | |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகமூடி - மூன்று ஓடு அடுக்குகள் - நெய்யா (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.50 இற்கு விதிக்கப்பட்டது |
| | முகமூடி - N95 வகை - (அறுவை சிகிச்சை/ உடல் நலம்/சுவாசம்/ மருத்துவம்) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.325 இற்கு விதிக்கப்பட்டது |
| 2020.03.18 | மைசூர் பருப்பு | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.130 இலிருந்து ரூ.65 இற்கு குறைக்கப்பட்டது |
| | பெரிய வெங்காயம் | கிலோ ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.190 இலிருந்து ரூ.150 இற்கு குறைக்கப்பட்டது |
| | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | 425 கிராம் தேறிய நிறைக்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.140 இலிருந்து ரூ.100 இற்கு குறைக்கப்பட்டது |

2019 ஒத்தோபர் 04 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கி.கிறாம் உருளையொன்றின் விலை ரூ.240 இனால் ரூ.1,493 இற்குக் குறைக்கப்பட்டது.

## வரித் திருத்தங்கள்

### தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி

2020 சனவரி 01 - தனியாள் வருமான வரி வீதங்கள், 4 சதவீதம், 8 சதவீதம், 12 சதவீதம், 16 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 24 சதவீதத்திலிருந்து 6 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 18 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டன. தொழில்நிலை வருமானம் ஆண்டொன்றிற்கு ரூ.1.2 மில்லியன் மற்றும் தனியாள் வருமானம் ஆண்டொன்றிற்கு ரூ.500,000 என்பனவற்றிலிருந்தான எந்தவொரு வருமானத்திற்கும் வரியற்ற எல்லை ஆண்டொன்றிற்கு ரூ.3 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. மேலும், வருமான வரி அடுக்குகள் ஆண்டொன்றிற்கு ரூ.600,000 இலிருந்து ஆண்டொன்றிற்கு ரூ.3 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

- கம்பனி வருமான வரி வீதங்கள் 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்பட்டன:
  - நியம கம்பனி வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - கட்டடவாக்க கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது
  - உற்பத்தி கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் 18 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது.

### உழைக்கும் போது செலுத்தும் வரி

2020 சனவரி 01 - வதிவோர் அல்லது வதிவற்ற நபருக்கான தொழில்நிலைப் பெறுகைகள் மீதான உழைக்கும் போது செலுத்தும் வரி நீக்கப்பட்டது. அதன்படி, இத்தகைய தொழில்நிலைப் பெறுகைகள், 6 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம் போன்ற வீதங்களிலுள்ள தனியாள் வருமான வரிக்குட்பட்டவையாகும்.

### பிடித்துவைத்தல் வரி

2020 சனவரி 01 - பின்வருவனவற்றைத் தவிர எந்தவொரு வதியும் நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் மீதான பிடித்துவைத்தல் வரி நீக்கப்பட்டது.

- அதிர்ஷ்டலாபம், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஆகியவற்றிலிருந்து வென்றதாகச் செலுத்தப்பட்ட தொகையின் 14 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சபையினால் நடத்தப்படுகின்ற ஏலத்தினது ஏதேனும் இரத்தினக்கல் விற்பனையின் மீதான 2.5 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- எந்தவொரு வதிவற்ற நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி

## பொருளாதாரப் பணிக் கட்டணம்

2020 சனவரி 01 - 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதாரப் பணிக் கட்டணம் நீக்கப்பட்டது

## வருமான வரி விலக்களிப்புக்கள்

2020 சனவரி 01 - தகவல்தொழில்நுட்பம் மற்றும் பணிகளை இயலுமைப்படுத்தல் போன்றவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம்

- வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம், அத்தகைய பணிகளுக்கான கொடுப்பனவுகள் ஒரு வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கிடைக்கப்பெற்றால் அது உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியேயுள்ளவர்களுக்கு வழங்கப்படும் பணிகளிலிருந்து உழைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றம் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம்
- ஏதேனும் வதிவற்றோருக்கு வதிவுடைய கம்பனியால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள்
- வர்த்தக மைய தொழில்முயற்சிகளால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபங்கள்
- ஆய்வுகூடப் பணிகள் அல்லது நியமசான்றிதழ் பணிகளிலிருந்து வதிவற்ற நபரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள்
- ஏதேனும் மத நிறுவனங்களால் மானியங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் பெறப்பட்ட தொகைகள்

## பெறுமதிசேர் வரி

2019 மே 21 - இலங்கைச் சுற்றுலா அபிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்த விடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் அல்லது வேறு அதனையொத்த பணிகளை வழங்குகின்ற அதனையொத்த தொழில்களினால் வழங்கப்படும் பணிகள் மற்றும் பயண முகவர் ஒருவரினால் உள்முக சுற்றுலாப் பயணங்கள் தொடர்பில் வழங்கப்படும் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு 15 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

2019 யூன் 01 - இலங்கைச் சுற்றுலா அபிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்த விடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் அல்லது வேறு அதனையொத்த பணிகளை வழங்குகின்ற அதனையொத்த தொழில்களினால் வழங்கப்படும் பணிகள் மற்றும் பயண முகவர் ஒருவரினால் உள்முக சுற்றுலாப் பயணங்கள் தொடர்பில் வழங்கப்படும் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி 2020 மாச்சு 31 வரை 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் அதிகரிக்கப்பட்டது.

2019 நவெம்பர் 01 - ஏற்றுமதியினை சார்ந்த முதலீட்டு சபைக் கம்பனிகளினால் சில ஆடைகளின் உள்நாட்டு விற்பனையின் மீது பிரயோகிக்கத்தக்க விலை அடிப்படையில் அமைந்த பெறுமதி சேர் வரி வீதத்தினை ரூ.75 இலிருந்து ரூ.100 ஆக அதிகரித்தல்.

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- கட்டுமான ஒப்பந்தகாரர்களினால் அவர்களது வெளிநாட்டுச் செயற்றிட்டங்களுக்கு பொருட்கள் வழங்குதல் ஏற்றுமதிகளாகக் கொள்ளப்பட்டது.

- கூட்டு ஆதன வீட்டலகு வழங்கல் மீதான பெறுமதி சேர் வரி 6 வீதமாகக் குறைக்கப்பட்டதுடன் அத்தகைய வழங்கலுடன் தொடர்புடைய உள்ளீட்டு வரி 5 சதவீதத்தில் கணிக்கப்பட்டது.

- 2016 நவெம்பர் 01 அன்று அல்லது அதற்கு பிறகு ஆனால் 2019 ஏப்பிறல் 01இற்கு முன்னதாக குடியிருப்பு விடுதியின் குத்தகை அல்லது வாடகை வழங்கல்களுடனான பணிகளின் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது

- 2019 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் குடியிருப்பு விடுதியின் குத்தகை அல்லது வாடகை வழங்கல்களுடனான பணிகளின் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இவ்வாறான வழங்கல்கள் 2019 ஏப்பிறல் 01 அன்று அல்லது அதன் பிறகு இடம்பெற்றிருந்தால் அவ்வாறானவை:

  - ஏதேனுமொரு கூட்டு ஆதன வீட்டலகு விற்பனையுடன் தொடர்புபடாதவிடத்து

  - கூட்டு ஆதன வீட்டுச் செயற்றிட்ட கூட்டு ஆதன வீட்டலகுகொன்றின் வழங்கல் அந்தச் செயற்றிட்டத்தின் ஏதேனுமொரு தனியலகின் அதியுச்ச விலை அல்லது சந்தைப் பெறுமதி (எது அதிகமாக இருப்பினும்) ரூ.25 மில்லியனை விஞ்சாதவிடத்து

  - பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டத்தின் தொடக்க திகதிக்கு முன்னர் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்திற்கமைவாக நிறைவேற்றப்பட்ட கூட்டு ஆதன வீட்டலகொன்றின் விற்பனை மீதான உடன்படிக்கை தொடர்புபட்டவிடத்து

  - பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டத்தின் தொடக்கத் திகதிக்கு முன்னர் தொடர்புடைய உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து இணக்கச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு நிறைவுபெற்ற கூட்டு ஆதன வீட்டலகின் வழங்கல் மீதான பெறுமதிசேர் வரியினை விலக்களித்தல்

**2019 திசெம்பர் 01**

- பெறுமதிசேர் வரி வீதம் பின்வருமாறு திருத்தப்பட்டது:

  - உள்ளூர் பொருட்கள்/ மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளீடுகளின் மொத்தப் பெறுமதியில் 60 சதவீதத்தினை விட குறைவாக இல்லாத இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட விடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள், அல்லது வேறு அதையொத்த பணிகளை வழங்குகின்ற அதையொத்த தொழில்களால் வழங்கப்படும் பணிகளின் வழங்கல் மீதான பெறுமதிசேர் விலக்களிக்கப்பட்டது.

  - நிதியியல் பணிகளுக்கான பெறுமதிசேர் வரி வீதத்தினை 15 சதவீதமாகப் பேணுதல்

  - இறக்குமதிப் பொருட்கள் (துணிகள்) மீதான பெறுமதிசேர் வரி விலக்களிப்பு

  - எந்தவொரு நபரால் கூட்டு ஆதன வீட்டலகின் விற்பனையின் மூலம் குடியிருப்பு விடுதி வழங்குவதன் மீதான பெறுமதிசேர் வரி விலக்களிப்பு

  - மேலே குறிப்பிட்ட பொருட்கள், பணிகளின் இறக்குமதி அல்லது வழங்கல்கள் தவிர்ந்த பொருட்கள் பணிகளின் இறக்குமதி அல்லது மற்றும் வழங்கல் போன்றவற்றின் மீதான பெறுமதிசேர் வரியினை 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்குக் குறைத்தல்.[2]

**2020 சனவரி 01**

- பெறுமதிசேர் வரியின் பதிவுக்கான எல்லையை ஆண்டொன்றிற்கு ரூ.12 மில்லியனிலிருந்து ரூ.300 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

- தகவல்தொழில்நுட்பம் மற்றும் பணிகளை இயலுமைப்படுத்தல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

**2020 மாச்சு 23**

- 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக முறையே 2020 மாச்சு 20 மற்றும் 2020 ஏப்பிறல் 20 அன்று செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகள் 2020 ஏப்பிறல் 30 வரை அனுமதிக்கப்பட்டது.

3 பாராளுமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டது.

### தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

2019 நவெம்பர் 01 - இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டின் இறக்குமதி மற்றும் விற்பனை மீதான விலக்களிப்பு நீக்கப்பட்டது

- வெட்டி மெருகூட்டப்பட்ட பின்னர் மீள் ஏற்றுமதிக்காக பதப்படுத்தாத இரத்தினக் கற்களின் இறக்குமதியானது அந்த இறக்குமதியாளர் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையில் பதிவுசெய்திருப்பினும் அத்தகைய பணிகளின் கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்திலிருந்து இலங்கைக்கு பணவனுப்பல் செய்யப்படுகின்றதாயினும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட தாவர எண்ணெயிலிருந்து தாவர எண்ணெய் தயாரிக்கும் உள்ளூர் தாவர எண்ணெய் உற்பத்தியாளர்களின் புரள்வு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- லுசேர்னா (அல்பல்பா) உணவு மற்றும் பெல்லட்ஸ் இறக்குமதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- மகிழ்வு அல்லது விளையாட்டு நோக்கங்களுக்கான உல்லாசப் படகு மற்றும் ஏனைய கலங்கள் இறக்குமதி தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு முதலீட்டுடனான ஒரு செயற்றிட்டத்திற்கு முதலீட்டுச் சபைக் கம்பனிகளுடன் ஒப்பந்தம் செய்துள்ள ஒரு தொழில்முயற்சியின் மூலமான பொருட்களின் இறக்குமதி அச்செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியில் அல்லது வர்த்தக நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னரான காலப்பகுதியில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- ஏதேனும் கட்டடம், வீதி, பாலம், நீர்வழங்கல், வடிகால் அல்லது கழிவுநீர் முறைமை, துறைமுகம், விமானநிலையம் அல்லது தொலைத்தொடர்பு அல்லது மின்சாரத்தின் ஏதேனும் உட்கட்டமைப்புச் செயற்றிட்டம் போன்றவற்றை நிர்மாணிப்பது தொடர்பான கட்டடவாக்க ஒப்பந்தக்காரர் அல்லது துணை ஒப்பந்தக்காரர்களின் பணிகள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த சுற்றுலாவிடுதிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள் அல்லது அதையொத்த வேறு தொழில்கள் மூலமான வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

2019 திசெம்பர் 01 - 2019 திசெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீக்கப்பட்டது.

### கலால் தீர்வை

அற்ககோல் அளவின் அடிப்படையில் வெறிய வகைக் குடிவகைகளின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| வகை | தற்போதைய வரி (அற்ககோல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.) | வரித் திருத்தம் (அற்ககோல் லீற்றர் ஒன்றிற்கு ரூ.) | |
|---|---|---|---|
| | 2017.11.10 இலிருந்து நடைமுறைக்கு வருதல் | 2019.03.06 | 2019.12.03 |
| விசேட சாராயம் | 3,300 | 3,300 | 3,800 |
| ஏனைய சாராயம் | 3,300 | 3,550 | 4,050 |
| இலங்கையில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானம் | 3,300 | 3,550 | 4,150 |
| பியர் (5 சதவீதத்திற்கு குறைவான அற்கோல் சதவீதம்) | 2,400 | 2,700 | 3,200 |
| பியர் (5 சதவீதத்திற்கு கூடுதலான அற்கோல் சதவீதம்) | 2,400 | 2,700 | 3,200 |
| உள்ளூர் வைன் | 100(அ) | 600 | 900 |

(அ) 2011.11.22 இலிருந்து நடைமுறைக்கு வருதல்

இறக்குமதிசெய்யப்பட்ட வெறிய வகைக் குடிவகைகளின் மீதான கலால் வரி பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது:

| வகை | தற்போதைய வரி (தொகைவடிவிலான லீற்றர் ஒன்றிற்கு ரூ.) | வரித் திருத்தம் (தொகைவடிவிலான லீற்றர் ஒன்றிற்கு ரூ.) | |
|---|---|---|---|
| | 2017.07.28 இலிருந்து நடைமுறைக்கு வருதல் | 2019.03.06 | 2019.12.03 |
| மோல்ட் வெறியக் குடிவகை (பியர்) | 50 | 55 | 135 |
| வைன் | 100 | 110 | 230 |
| ஏனைய | 200 | 215 | 650 |

## கலால் (சிறப்பு ஏற்பாடுகள்)

சிகரெட் மீதான கலால் தீர்வையானது பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| வகை | தற்போதைய வரி வீதம் (1,000 குச்சிகளுக்கு ரூ.) | வரித் திருத்தம் (1,000 குச்சிகளுக்கு ரூ.) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2017.11.10 இலிருந்து நடைமுறைக்கு வருதல் | 2019.03.06 | 2019.05.13 | 2019.07.11 | 2019.10.15 | 2019.12.01 |
| < 60 மி.மீற்றர் | 11,675 | - | - | - | - | 13,360 |
| 60 - 67 மி.மீற்றர் | 17,375 | 19,500 | - | - | - | 22,300 |
| 67 - 72 மி.மீற்றர் | 20,500 | 23,000 | - | 37,600 | 33,000 | 37,650 |
| 72 - 84 மி.மீற்றர் | 33,550 (அ) | 37,580 | 37,600 | - | - | 43,100 |
| > 84 மி.மீற்றர் | 37,675 (அ) | 42,200 | - | - | - | 48,350 |

(அ) 2018.08.01 இலிருந்து நடைமுறைக்கு வருதல்

பல பொருட்களின் மீதான கலால் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது:

| வகை | தற்போதைய வரி | 2019.03.06 அன்று வரித் திருத்தம் |
|---|---|---|
| இனிப்பு குடிபானங்கள் | மிகையான விலக்களிப்பு அளவுகளில் சீனி கிறாமொன்றிற்கு 30 சதம் அல்லது லீற்றரொன்றிற்கு ரூ.12 - 2018.02.04 இலிருந்து நடைமுறைக்குவருதல் (அ) | மிகையான விலக்களிப்பு அளவுகளில் சீனியின் கிறாம் ஒன்றிற்கு 40 சதம் அல்லது லீற்றரொன்றிற்கு ரூ.12 (அ) |
| தாவர எண்ணெ் கொழுப்பு அமிலங்கள் | 25 சதவீதம்<br>- 2018.10.09 இலிருந்து நடைமுறைக்குவருதல் | 20 சதவீதம் |
| ரலோ கொழுப்பு அமிலங்கள் | 25 சதவீதம்<br>- 2018.10.09 இலிருந்து நடைமுறைக்குவருதல் | 20 சதவீதம் |
| குளிரூட்டிகள் | 17 சதவீதம்<br>- 2017.11.10 இலிருந்து நடைமுறைக்குவருதல் | 25 சதவீதம் |
| இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட அடிச்சட்டங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட சாதனங்கள் | ரூ.700,000<br>- 2017.11.10 இலிருந்து நடைமுறைக்குவருதல் | ரூ.500,000 |

(அ) சீனியை உள்ளடக்கிய குடிபானங்களின் விலக்களிப்பு அளவுகள் பின்வருமாறு குறைக்கப்பட்டது:
- காபனேற்றிய குடிபானங்கள் 100 மி.லீற்றருக்கு 6 கிறாமிலிருந்து 4 கிறாமிற்கு
- பழவகையை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் 100 மி.லீற்றருக்கு 9 கிறாமிலிருந்து 8 கிறாமிற்கு

2019 மாச்சு 06 - 2,000 கன சென்ரி மீற்றருக்கு குறைந்த இயந்திர இயலளவுடனான மோட்டார் வாகனங்கள் மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | இறந்தவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், கலப்பு மற்றும் மின்னியல் வான்கள் மற்றும் ஒற்றை வாடகை கார்கள் என்பவற்றின் மீதான கலால் தீர்வையானது குறைக்கப்பட்டது. |
| | - | 2,000 கிலோ கிராமிற்கு குறைவான இயலளவினை உடைய சரக்கு ஏற்றிச்செல்லும் சிறிய பாரவூர்திகள் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. |
| 2019 மாச்சு 15 | - | தெரிவுசெய்யப்பட்ட மின்னியல் வாகனங்கள் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டது. |

### சுங்கத் தீர்வை

பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை பின்வருமாறு திருத்தப்பட்டது

| திகதி | வகை | சுங்க இறக்குமதித் தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) | சுங்கத் தீர்வை விலக்கல் (லீற்றரொன்றிற்கு ரூ.) | ஏற்புடைத்தான தீர்வை (லீற்றரொன்றிற்கு ரூ.) |
|---|---|---|---|---|
| 2018.12.29 | பெற்றோல் (92 ஒக்ரேன்) | 35.00 | 20.00 | 15.00 |
| 2019.01.12 | | 35.00 | 19.00 | 16.00 |
| 2019.06.12 | | 35.00 | 18.00 | 17.00 |
| 2019.09.11 | | 35.00 | 17.00 | 18.00 |
| 2018.11.20 | தன்னியக்க டீசல் | 5.85 | 5.00 | 0.85 |
| 2019.01.12 | | 5.85 | 3.00 | 2.85 |
| 2019.01.12 | சிறப்பு டீசல் | 10.55 | - | 10.55 |
| 2019.06.12 | | 15.00 | 1.00 | 14.00 |
| 2019.07.11 | | 15.00 | - | 15.00 |

| | | |
|---|---|---|
| 2019 மாச்சு 06 | - | பதனிப்படாத ஏதெயில் அல்ககோல் மீதான சுங்கத் தீர்வை லீற்றரொன்றிற்கு ரூ.200 இனால் ரூ.1,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பந்தய ஊர்தி மற்றும் பந்தய ஊர்திகளின் சக்கரங்களின் இறக்குமதி மீதான 30 சதவீதமான சுங்கத் தீர்வை நீக்கப்பட்டது. |
| | - | தெரிவுசெய்யப்பட்ட 261 வகையான பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை அலகு வீதம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 28 | - | இறக்குமதி செய்யப்பட்ட பழவர்க்க குடிவானங்கள் மீது பிரயோகிக்கக்கூடிய சுங்கத்தீர்வை திருத்தம் செய்யப்பட்டது. |
| 2020 சனவரி 14 | - | கோதுமை மா மீதான தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.13 ஆக விதிக்கப்பட்டு பிரயோகிக்கக்கூடிய தீர்வையை கி.கிறாமொன்றிற்கு ரூ.3 ஆக மாற்றியது. |

### செஸ்

| | | |
|---|---|---|
| 2019 மாச்சு 06 | - | உலர்ந்த பழங்கள், உடன் அல்லது உலர்ந்த விதைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட அல்லது மறுசீரமைப்புச் செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டி, உறைநிலைப் பெட்டிகள் என்பன செஸ் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | ரெண்டு இலைகள் (பீடீ இலைகள்) மீது பிரயோகிக்கப்படும் செஸ் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.2,500 இலிருந்து ரூ.3,500 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், உக்கக்கூடியதும் மற்றும் உரமாக்கக்கூடியதுமான பிளாத்திக்குகள் மீதான செஸ் தீர்வைகள் திருத்தப்பட்டன. |
| 2019 ஒத்தோபர் 03 | - | இலங்கை முதலீட்டுச் சபை ஒப்பந்தமொன்றினைக் கைச்சாத்திட்டுள்ள அத்துடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்துள்ள ஏதேனும் சுற்றுலா தொழில்முயற்சியின் தளபாட இறக்குமதி செஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |

- 2019 மாச்சு 06 அன்று அல்லது அதற்குப் பின்னர் செயற்றிட்டமொன்றில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேல் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி மூலமான பொருட்கள் இறக்குமதிகள் மீது குறிப்பிட்ட செயற்றிட்டத்தில் நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் போது அல்லது நிருமாண காலப்பகுதியின் போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் செஸ் விலக்களிக்கப்பட்டது.

- காலநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை வசதியினை.'. குளிரூட்டல் சங்கிலி ஏற்பாட்டுச் சேவைகள் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கான செயற்றிட்டமொன்றில் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சியின் பொருட்கள் இறக்குமதி மீதான செஸ் நிதியமைச்சின் செயலாளரின் பொருட்கள் அட்டவணையின் அனுமதிக்குட்பட்டு குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியின் போது அல்லது நிருமாணக் காலப்பகுதியின்போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் 3 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டது.

2020 சனவரி 14 - கோதுமை மா மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.15 செஸ் தீர்வை நீக்கப்பட்டது.

## சிறப்புப் பண்டத் தீர்வை

பல பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை பின்வருமாறு மீள்திருத்தப்பட்டது.

| திகதி | பொருள் | திருத்தம் |
|---|---|---|
| 2019.01.04 | உழுந்து | ஆறு மாத காலப்பகுதியினைக் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.125 இலிருந்து ரூ.200 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.02 | கொண்டைக் கடலை, (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), சிவப்புப் பருப்பு முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட), மஞ்சள் பருப்பு (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட) பீற் சீனி, கரும்புச் சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.02.08 | உருளைக்கிழங்கு | மூன்று மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.50 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.09 | சோளம் | ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிக்கு ரூ.10 இலிருந்து ரூ.20 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2019.02.25 | காய்கறி எண்ணெய் | ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.03.03 | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு ரூ.20 சிறப்புப் பண்டத் தீர்வை 3 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2019.05.08 | நெத்தலி, கருவாடு, உருளைக்கிழக்கு, பச்சைப்பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும் உலர்ந்த) தோடம்பழம் (உலர்ந்த), பெயார்ஸ், செர்ரி, உலர்ந்த திராட்சை மற்றும் திராட்சை, கிவிப் பழம் | 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.05.21 | சின்ன வெங்காயம் பட்டாணிக்கடலை (முழுமையான மற்றும் உடைக்கப்பட்ட) பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) திராட்சை, (உலர்ந்த) சீரகம், பெருஞ்சீரகம், மாஜரீன் | ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.05.22 | பெரிய வெங்காயம் | ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.20 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.40 ஆகக் காணப்பட்டது. |
| 2019.07.04 | உழுந்து | ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.200 சிறப்புப் பண்டத் தீர்வை நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2019.07.11 | பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.60 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.80 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | தோடம்பழம் (உடன்) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.65 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.80 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | அப்பிள் (உடன்) | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.45 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.60 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| | காய்கறி எண்ணெய் | 31 நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. |
| 2019.07.19 | மாசி, மிளகாய், கொத்தமல்லி விதைகள், மஞ்சள், உழுந்து மா, துருவிய மாவாக்கப்பட்ட பாற்கட்டித் துண்டுகள் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.08.02 | கொண்டைக்கடலை (முழுமையானது மற்றும் உடைத்தது) சிவப்புப் பருப்பு (முழமையானது மற்றும் உடைத்தது), மஞ்சள் பருப்பு (முழமையானது மற்றும் உடைத்தது), பீற் மற்றும் கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குருவான கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குருவான பீற் சீனி, | ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.08.09 | சோளம் | ஆறு மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.10ஆகக் குறைக்கப்பட்டது. |
| 2019.08.11 | பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த) தோடம்பழம் உடன் மற்றும் உலர்ந்த) அப்பிள் (உடன்) காய்கறி எண்ணெய் | மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.09.08 | மெக்கரல், தட்டைப்பயறு மற்றும் குரக்கன் | ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.09.11 | உழுந்து | கி.கிறாமொன்றிற்கு ரூ.200 சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.10.01 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைந்த) யோகட், வெண்ணெய், பால் சார்ந்த தடவு பொருட்கள், உள்ளி, திராட்சை (உடன்), வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை (தோலுடன்), கடுகு மற்றும் உப்பு | ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.10.03 | பெரிய வெங்காயம் | 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 ஆகக் குறைக்கப்பட்டது |
| 2019.10.29 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) | 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.100 என்பதின் உயர்ந்த பெறுமதியிலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 ஆகத் திருத்தப்பட்டது. |
| | மிளகாய் (உலர்ந்த, நொருக்கப்படாத அல்லது தூளாக்கப்படாத) | 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.5 ஆகக் குறைக்கப்பட்டது. |
| 2019.11.03 | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு ரூ.1 சிறப்புப் பண்டத் தீர்வை 3 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2019.11.08 | நெத்தலி, கருவாடு, உருளைக்கிழங்கு, பச்சைப் பயறு, மங்குஸ்தான் (உடன் மற்றும உலர்ந்த) தோடம்பழம் (உலர்ந்த), பெயார்ஸ், செறி, உலர்ந்த திராட்சை மற்றும் திராட்சை மற்றும் கிவிப்பழம் | ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2019.11.11 | பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்த), தோடம்பழம் (உடன்), அப்பிள் (உடன்) மற்றும் காய்கறி எண்ணெய் | 03 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2019.12.14 | கோதுமை மா | கி.கிறாமொன்றிற்கு ரூ.8 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2019.12.25 | உருளைக்கிழங்கு | 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.50 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25ஆகக் குறைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2020.01.25 | உருளைக்கிழங்கு | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.02.02 | பெரிய வெங்காயம், கொண்டைக் கடலை, சிவப்பு பருப்பு (முழுமையானது மற்றும் உடைத்த) மஞ்சள் பருப்பு (முழுமையானது மற்றும் உடைத்தது), பேரீச்சம்பழம் (உடன் மற்றும் உலர்ந்தது), தோடம்பழம் (உடன்), அப்பிள் (உடன்), சோளம், காய்கறி எண்ணெய், பீற் மற்றும் கரும்புச்சீனி, வெள்ளைப் பளிங்குருவான கரும்புச் சீனி மற்றும் வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | 06 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.02.07 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 ஆக 03 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.02.25 | உருளைக்கிழங்கு | கி.கிறாமொன்றிற்கு ரூ.25 சிறப்புப் பண்டத் தீர்வை 31 நாட்கள் காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |
| 2020.03.04 | மீன் (உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) | 06 மாத காலப்பகுதிக்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.150 ஆக அதிகரிக்கப்பட்டது |
| 2020.03.08 | மெக்கரல், உழுந்து, தட்டைப்பயறு மற்றும் குரக்கன் | 06 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது |

### துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை

2019 மாச்சு 06

- சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டு தயாரித்தல் கைத்தொழிலின் முற்பண செலவினைக் குறைப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 இலிருந்து 2.5 ஆகக் குறைக்கப்பட்டது.
- தையல் இயந்திரங்கள் மற்றும் அரைத்தல் அல்லது பொலிவாக்குதலுடன் தொடர்பான இயந்திரங்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.
- லுசேர்னா (அல்பல்பா) மற்றும் பெல்லட்ஸ் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.
- ஏதேனும் முதலீட்டுச் சபை கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்ட மகிழ்வான அல்லது பயணத்திற்கான கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்பானவை விற்கப்படும் போதும் இன்னொரு முதலீட்டுச் சபைக் கம்பனிக்கு அத்தகைய கப்பல்கள் மற்றும் கப்பல்களுடன் தொடர்புபட்ட அதன் வியாபாரங்களுக்கு வாடகைக்குவிடும் போதும் விதிக்கப்படும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

2019 மே 07

- பாதுகாப்பு உபகரணங்களின் இறக்குமதி துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

2019 யூன் 01

- தெரிவுசெய்யப்பட்ட உயர் தொழில்நுட்பம் கொண்ட இயந்திரங்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை நீக்கப்பட்டது.

2019 செத்தெம்பர் 25

- 2019 மாச்சு 06 அன்று அல்லது அதற்கு பின்னர் செயற்றிட்டமொன்றில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் அல்லது அதற்கு மேல் முதலிடுகின்ற ஏதேனும் தொழில்முயற்சி மூலமான பொருட்கள் இறக்குமதிகள் மீது குறிப்பிட்ட செயற்றிட்ட நடைமுறைக் காலப்பகுதியின் போது அல்லது நிருமாண காலப்பகுதியின் போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்களிக்கப்பட்டது.
- காலநிலை கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சியசாலை வசதியினை.'. குளிரூட்டல் சங்கிலி ஏற்பாட்டுச் சேவைகள் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கானக் செயற்றிட்டமொன்றில் ஏதேனும் தொழில்முயற்சி மீதான பொருட்கள் இறக்குமதி மீது நிதியமைச்சின் செயலாளரின் பொருட்கள் அட்டவணையின் அனுமதிக்குட்பட்டு குறிப்பிட்ட செயற்றிட்டம் நடைமுறைக்கிடப்பட்ட காலப்பகுதியின் போது அல்லது நிருமாணக் காலப்பகுதியின்போது ஆனால் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை விலக்களிக்கப்பட்டது.

| | - | தெரிவுசெய்யப்பட்ட 368 பொருட்கள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட ஆறு பொருட்கள் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |

2019 திசெம்பர் 06 - துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை வீதம் 7.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

- தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீது சலுகை ரீதியான வீதங்கள் மற்றும் விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

## உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி

2019 மாச்சு 06 - இயந்திர கொள்ளளவின் அத்துடன் ஆடம்பர வரியற்ற எல்லைகளை விஞ்சுகின்ற தொகையின் அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட ஊர்திகள் மீது செலவு காப்புறுதி கப்பற்செலவு பெறுமதியிலும் உள்நாட்டில் ஒன்றுசேர்க்கப்பட்ட ஊர்திகள் தொடர்பில் தயாரிப்பாளரின் விலையிலும் ஆடம்பர வரியினை பின்வருமாறு விதிப்பதற்கு 2113/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

| வாகனத்தின் வகை | இயந்திரக் கொள்ளளவு | ஆடம்பர வரியற்ற எல்லை | வீதம் (அ) |
|---|---|---|---|
| டீசல் | x > 2300 கன செ.மீ | ரூ.3.5 மில்லியன் | 120% |
| பெற்றோல் | x > 1800 கன செ.மீ | ரூ.3.5 மில்லியன் | 100% |
| கலப்பு டீசல் | x > 2300 கன செ.மீ | ரூ.4.0 மில்லியன் | 90% |
| கலப்பு பெற்றோல் | x > 1800 கன செ.மீ | ரூ.4.0 மில்லியன் | 80% |
| மின்னியல் | x > 200 கி.வா | ரூ.6.0 மில்லியன் | 60% |

(அ) ஆடம்பர வரியற்ற எல்லை மற்றும் இயந்திரக் கொள்ளளவினை விஞ்சிய தொகை மீது பிரயோகிக்கப்படும்.

2019 நவெம்பர் 01 - உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரிக்கான இயந்திரக் கொள்ளளவின் பிரயோகிப்பு அகற்றப்பட்டதுடன், உந்து ஊர்திகள் மீதான ஆடம்பர வரி, செலவுக் காப்புறுதி கப்பற் கட்டணம் பெறுமதியில் அல்லது உள்நாட்டில் ஒன்றுசேர்க்கப்பட்ட வாகனங்கள் தொடர்பில் தயாரிப்பாளரின் விலையில் ஆடம்பர வரியற்ற அடிப்படை அளவினை விஞ்சுகின்ற தொகையினை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்படவுள்ளது.

## காபன் வரி

2019 சனவரி 01 - 2018ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் ஊர்திகள் மீது விதிக்கப்பட்ட காபன் வரி பின்வருமாறு:

| வாகனத்தின் வகை | வாகனத்தின் வயது/ வீதம் | | |
|---|---|---|---|
| | 5 ஆண்டுகளுக்குக் குறைந்த | 5 இலிருந்து 10 ஆண்டுகள் வரையான | 10 ஆண்டுகளுக்கு கூடிய |
| கலப்பு (பெற்றோல்/ டீசல் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 25 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 |
| எரிபொருள் (பெற்றோல்/ டீசல்) | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு 50 சதம் | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.00 | கன சென்ரி மீற்றர் ஒன்றிற்கு ரூ.1.50 |
| பயணிகள் பேரூந்து | ரூ.1,000 | ரூ.2,000 | ரூ.3,000 |

2019 திசெம்பர் 01 - காபன் வரி நீக்கப்பட்டது.

## ஏனைய வரிகளும் மற்றும் தீர்வைகளும்

2019 சனவரி 01 - ஆண்டொன்றிற்கு ரூ.200,000 எனும் வீதத்தில் செல்லிடத் தொலைபேசி இயக்குநர்கள் மீது செலூலர் கோபுரத் தீர்வை விதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | ஒவ்வொரு செல்லிடக் குறுந்தகவலுக்கு 25 சதம் எனும் வீதத்தில் செல்லிடக் குறுந்தகவல் பணி மூலமாக அனுப்பப்படும் தொகை விளம்பரங்கள் மீது செல்லிடக் குறுந்தகவல் பணி மீதான தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 01 | - | வானூர்தி அல்லது கப்பல் மூலம் இலங்கையில் இருந்து செல்லுகின்ற நபர்களுக்கு பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 10 இலிருந்து ஐ.அ.டொலர் 60 ஆக கப்பலேறும் தீர்வை அதிகரிக்கப்பட்டது. |
| 2019 ஓகத்து 01 | - | கப்பலேறும் தீர்வையின் அதிகரிப்பு இரத்துச் செய்யப்பட்டதுடன் 2019 ஓகத்து 01 தொடக்கம் 2020 சனவரி 31 வரையான காலப்பகுதியில் முன்னைய வீதமான பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 50 பிரயோகிக்கத்தக்கதாக செய்யப்பட்டது. 2020 பெப்புருவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பயணி ஒருவருக்கு ஐ.அ.டொலர் 60 அதிகரித்த வீதம் விதிக்கப்படுகின்றது. |
| 2019 ஒத்தோபர் 23 | - | பொருட்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்வதற்கு இலத்திரனியல் நிதி மாற்றல் அட்டைகளை (பற்று மற்றும் கடன் அட்டைகள் இரண்டும்) பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு கொடுப்பனவுகள் மீது 3.5 சதவீதம் கொண்ட வீதத்தில் வெளிநாட்டு வர்த்தக கொடுக்கல்வாங்கல் மீதான தீர்வையொன்று விதிக்கப்பட்டது. தீர்வையின் நடைமுறைப்படுத்தல் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் நிதியமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படும். |
| 2019 திசெம்பர் 01 | - | தொலைத்தொடர்பு தீர்வை 15 சதவீதத்திலிருந்து 11.25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2020 சனவரி 01 | - | படுகடன் மீள்செலுத்தல் தீர்வை நீக்கப்பட்டது. |
| 2020 மாச்சு 23 | - | 2020 ஏப்பிறல் 15 செலுத்தப்பட வேண்டிய 2020இன் முதலாம் காலாண்டிற்கான தபால் தீர்வைக் கொடுப்பனவு 2020 ஏப்பிறல் 30 வரை அனுமதிக்கப்பட்டது. |

## ஏனைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்

2019 யூன் 01 - கடவுச்சீட்டு செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன:

அலகொன்றிற்கு ரூ.

| வகை | முன்னைய கட்டணம் | திருத்தப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| மாற்றம் செய்வதற்கான கட்டணம் | 500 | 1,000 |
| செயன்முறைப்படுத்தல் கட்டணம் (அவசர அடிப்படையில்) | 10,000 | 15,000 |
| மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு 16 வயதை விடக் குறைந்த பிள்ளைகளுக்கு | 5,000 | 7,500 |
| செயன்முறைப்படுத்தல் கட்டணம் (சாதாரண அடிப்படையில்) | 3,000 | 3,500 |
| மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு 16 வயதை விடக் குறைந்த பிள்ளைகளுக்கு | 2,000 | 2,500 |

## அரசாங்கச் செலவினம்

| | | |
|---|---|---|
| 2019 ஏப்பிறல் 22 | - | 2019 யூலை 01 ஆம் திகதி நடைமுறைக்கு வகையில் அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் இடைக்காலப் படிக் கொடுப்பனவொன்றாக மாதமொன்றுக்கு ரூ.2,500 இனை வழங்குவதற்கு பொது நிருவாக சுற்றிக்கை இல 09.∴2019 வெளியிடப்பட்டது. |
| 2019 மே 31 | - | ஓய்வுபெறும் காலத்தில் ஓய்வூதியரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைச் சம்பளத்திற்கான 03/2016ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கையில் முதல் இரண்டு பகுதிகளையும் ஒன்றிணைக்கும் பொருட்டு 2019 யூலை 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கு பொது நிருவாக சுற்றறிக்கை இல. 14.∴2019 வெளியிடப்பட்டது. |
| 2019 யூன் 17 | - | அனைத்து செலவிடுகின்ற முகவராண்மைகளும் தமது மூலதனச் செலவினத்தினை 15 சதவீதத்தினால் குறைப்பதற்கும் நடைமுறைச் செலவினத்தினைக் குறிப்பாக மின்சாரம், |

| | | |
|---|---|---|
| | | தொலைபேசி, நீர்வழங்கல், எரிபொருள் நுகர்வு மற்றும் காகிதாதிகள் என்பன மீதான செலவினத்தினைச் சீரமைப்பதன் ஊடாக குறைப்பதற்கும் அறிவுறுத்தி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 04.ீ.2019 வெளியிடப்பட்டது. |
| 2019 செத்தெம்பர் 24 | - | முன்னுரிமையற்ற செயற்றிட்டங்கள், புதிய செயற்றிட்டங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் கொள்வனவு என்பனவற்றை காலங்கடத்துவதன் மூலம் அனைத்து செலவிடுகின்ற முகவராண்மைகளும் தமது மூலதன செலவினத்தை மேலும் 10 சதவீதத்தால் குறைப்பதற்கு அறிவுறுத்தி தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல.05.ீ.2019 வெளியிட்டது. |
| 2019 திசெம்பர் 04 | - | அனைத்து அரச செலவிடல் முகவர்களுக்கு அவர்களின் அத்தியாவசியமற்ற மற்றும் முன்னுரிமையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கு தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இல.07/2019 வெளியிடப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 14 | - | தேசிய கூலிக் கொள்கையினை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்காக அரசிற்கு ஆலோசனை மற்றும் உதவிசெய்வதற்கு தேசிய ஊதிய ஆணைக்குழு நிறுவப்பட்டது. |
| 2020 மாச்சு 30 | - | கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் மற்றும் தனிநபர்களுக்கு (சமுர்த்தி, வயது முதிர்ந்த நபர்கள், ஊனமுற்ற நபர்கள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வேளாண்மையாளர்கள்) மொத்தத் தொகையாக ரூ.5,000 பணக் கொடை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. |

### படுகடன் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 2019 சனவரி 27 | - | திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படை அளவு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்த வெளிநின்ற இருப்பின் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. |
| 2019 மாச்சு 25 | - | லங்காசெகுயர் முறைமையிலுள்ள ஒவ்வொரு பிணையக் கணக்குகளில் நிறைவேற்றப்படும் பத்திரமற்ற பிணையங்களின் ஒவ்வொரு கடன் மற்றும் வரவு பதிவுகளுக்கான குறுந்தகவல் அல்லது மின்னஞ்சலினை அனுப்புவதற்கு லங்காசெகுயரின் வாடிக்கையாளர்களுக்கான அதேநேர அறிவிப்பு வசதி தொடங்கப்பட்டது. |
| 2019 ஏப்பிறல் 11 | - | 2019-2023 காலப்பகுதிக்காக நிதியமைச்சினாலும் மத்திய வங்கியினாலும் தொகுக்கப்பட்ட நடுத்தர கால படுகடன் உபாயம் வெளியிடப்பட்டது. |
| 2019 யூலை 09 | - | 2018இன் 8ஆம் இலக்க தீவிரப்பொறுப்பு முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் ரூ.480 பில்லியன் வரை திரட்டுவதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டது. |
| 2019 ஒத்தோபர் 01 | - | 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் லங்காசெகுயர் முறைமையின் ஒவ்வொரு பிணையக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுப் பெறுமதி, விலை மற்றும் வட்டி வீதம் போன்றவற்றைக் கைப்பற்றுவதன் மீதான சுற்றறிக்கையொன்று லங்கா தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு வெளியிடப்பட்டது. |

### ஏனையவை

| | | |
|---|---|---|
| 2019 பெப்புருவரி 14 | - | பொருத்தம் மற்றும் தகுதித் தேவைப்பாடுகள், பணத் தரகு வியாபாரம் தொடர்பில் கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்துதல், உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மற்றும் ஏடுகளைப் பரீட்சித்தல் தொடர்பில் 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளை திருத்தும் விதத்தில் 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. |